JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**Accused absent. 317 crpc petition filed and allowed.**
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 05.11.2025.

**C.C.240/2009** **Name**:மோகனசுந்தரம் **S/o**.பொன்னுசாமி **P.W**.4

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.4 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1) என்னை இந்த வழக்கு சம்மந்தமாக 04.04.2009ம் தேதியன்று தான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளரிடம் தாசில்தாரிடம் முன் அனுமதி பெற்று செல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பணியில் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த தாளில் எத்தனை பக்கங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கைப்பற்றிய ஜென் காரின் மாடல், பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) எங்கள் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலம் எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்து செய்த போது எதிரி காவல் நிலையத்தில் வைக்கபட்டிருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. போலீசார் கேட்டு கொண்டதற்கான பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை